
# கலைமடந்தையின் தவப் புதல்வன்



சிற்பாசாரியார் திரு. வி. ஆறுமுகம் அவர்களின்
வாழ்க்கை வரலாறும் கலைத் தொண்டும்

# கலைமடந்தையின் தவப் புதல்வன்

(சிற்பாசாரியார் திரு. வி. ஆறுமுகம் அவர்களின்
வாழ்க்கை வரலாறும் கலைத் தொண்டும்)

இரசிகமணி
**கனக. செந்திநாதன்**

வெளியீடு :
குரும்பசிட்டி சன்மார்க்கசபை
1964

குரோதி௵
ஆனிமீ ௯௨

சுன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

உ

கலைமடந்தை தவப்புதல்வன் கற்பனைக்கிங்
கெல்லையில்லாக் கலைஞ ரேறு
அலைகொழிக்குங் கடல்கடந்தும் அரியபல
வாகனங்கள் அளித்த பெம்மான்
விலைமதிக்க முடியாத சிற்பமொடு
தேர்மஞ்சம் விளங்கச் செய்தோன்
தலைமகனும் ஆறுமுகன் தனிப்பெருஞ்சீர்
கூறிடநம் தமிழ்த்தாய் வாழ்வாள்.



சிற்பாசாரியார் வி. ஆறுமுகம் அவர்கள்

## கலைமடந்தையின் தவப்புதல்வன்

*சிற்பாசாரியார் ஆறுமுகம் அவர்கள்*

### கலையும் கலைஞரும்

" கலையானது அழகுணர்ச்சியில் ஆரம்பித்து இயற்கைக்கும் செயற்கைக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்ந்து அதிற் கண்டறிந்தவற்றைக் கொண்டு செயற்கைப் பொருளான கலைப்பொருளை ஆக்குவதாகிய ஆக்கத்திலேதான் முடிவடைகின்றது" என மேலைநாட்டுக் கலா விமர்சகர் ஒருவர் கூறுகின்றார். " தான் அனுபவித்த ஓர் உணர்ச்சியை அப்படியே பிறரும் அநுபவிக்கும்படி செய்யத் தூண்டும் மன இயக்கமே கலை" என்கிறார் ருஷ்ய ஞானி டால்ஸ்டாய். " இதுவே கலையைப்பற்றிய நறுக்கான கருத்து" என்கிறார் பேரறிஞர் " பேணாட் ஷோ ".

ஐரோப்பியக் கலைவல்லுநர்கள் இப்படியெல்லாம் வரைவிலக்கணம் கூற, இந்தியக் கலைவல்லுநர்கள் இந்தக் கொள்கையை விரித்து, "ஐரோப்பியச் சிற்பமும் ஓவியமும் இயற்கையின் தோற்ற அழகினை நன்ருக உருப்பெற அமைத்துக் காட்டும் வகையைத் தம் இலக்காகக் கொண்டுள்ளன. இந்தியச் சிற்பமும் ஓவியமும் தான் எடுத்துக் கொண்ட உருவத்தினது அகத்தின் இயல்பையும் அதனுட்படும் ஆன்மாவின் நிலையையும் வெளியிட்டுக் காட்டுவதாகும்" என்று கூறுகின்றனர்.

இந்தியாவில்—முக்கியமாகத் தென்ருட்டில்—இருந்த சிற்பிகளே இலங்கையின் கலைவளர்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்தார்கள். இதன் விரிவை கௌரவ செனேற்றர் சு. நடேசபிள்ளை அவர்கள் 'இலங்கையிற் கலை வளர்ச்சி' என்ற நூலின் முகவுரையில் அழகாக எழுதியுள்ளார்கள் :

"பாரதநாட்டின் கலை கடல் கடந்து இலங்கை, சாவகம், சீயம், கம்போடியா என்ற தேசங்களிற் பரவியுள்ளது. இலங்கையில் அக்கலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வளர ஆரம்பித்தது.

இலங்கையின் வடபாகத்தைத் தமிழரசர் ஆண்ட காலத்திலே பலவிதக் கலைஞர்கள் கோவிலை முக்கிய இடமாகக் கொண்டு பலவகைக் கலைகளையும் வளர்த்தார்கள். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலேயும் அக் கலைகளானவை ஆங்காங்கே இலைமறை காய்களாக இருந்தே வந்தன, யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களில் வெள்ளியாற் செய்யப்பட்ட வாகனங்களும் பீடங்களும் மகர தோரணங்களும் கல்லிழைத்த தங்க ஆபரணங்களும் இன்றும் உபயோகத்தில் இருக்கின்றன. அப்படி மரத்திலே கலையம்சம் பொருந்தக் கூடிய வாகனங்களையும் சிற்பங்களையும் ஆக்கக்கூடிய கைவினைஞர் மட்டுவில், வட்டுக்கோட்டை என்னும் இடங்களில் பரம்பரை பரம்பரையாகவே வாழ்ந்து வந்தனர். அப்படியான கலைஞர் குடும்பம் ஒன்றிலேதான் திரு. வி. ஆறுமுகம் அவர்கள் தோன்றினார்கள். ஈழத்தின் — முக்கியமாக யாழ்ப்பாணத்தின் — சிற்பக் கலையின் உன்னதச் சிறப்பு எப்படி இருந்திருக்கும் என்பதை அவரால் நாம் அறிய முடிந்தது.

வாழ்க்கை வரலாறு

அருணசல மான்மியம், இராமநாத மான்மியம் முதலிய நூல்களை இயற்றிய பொன்னம்பலபிள்ளை முதலிய புலவர் பெருமக்களை அளித்த பெருமை சாவகச்சேரிப் பகுதிக்குண்டு. ஈழமண்டலசதகம், திருவாதவூரடிகள் புராண உரை முதலிய அரும்பெரும் நூல்களை ஆக்கிய பெருமைக்குரிய உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களைத் தந்த பெருமை மட்டுவிற் பதிக்குரியது. அப்படிப்பட்ட புகழ்பெற்ற மட்டுவிற் பதியிலேதான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பெருஞ்சொற் கொண்டல் குருகவி மகாலிங்கசிவம் போன்ற தமிழ்க்கடல்களும் தோன்றினர்கள். அதே மட்டுவிலிலேதான் சிற்பக் கலைஞர் விஸ்வப்பிரம்மஸ்ரீ வி. ஆறுமுகம் அவர்களும் தோன்றினர்கள். மட்டுவில் ஐயம்பிள்ளை – விநாயகர் அவர்களுக்கும் சின்னப்பிள்ளை அம்மையாருக்கும் மூத்த மகனாக கரவருடம் (1891) மார்கழிமாதம் திருவாதிரை நட்சத்திர சுபதினத்தில் ஆறுமுகம் அவர்கள் பிறந்தார். சிறுவயதிலே மட்டுவில் ம. க. வேற்பிள்ளை ஆசிரியரிடத்திலே தமிழ்க்கல்வியைப் பயின்ருர். ஓரளவு கல்விப்பயிற்சி முடிந்தவுடன்

தமது குலத்தொழிலைத் தகப்பனுரிடமே கற்றுக்கொண்டார். அப்படிப் படிப்பது தான் அக்கால முறை; அதுவே சாலச் சிறந்தது. அந்தக் கல்விமுறையின் விசேடத்தைப்பற்றி கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் புகழ்ந்து கூறுவது இது:

"உண்மையான வேலைத்தலத்தில் கைவினை மாணவன் பயிற்றப்படுவதோடு வளர்க்கவும் படுகின்றான். அவன் தன் தந்தையின் சீடனுமாகின்றான். அவன் இந்த நிலைமைகளை இழக்க நேரிடின் உலகிலுள்ள எந்தத் தொழிற் கல்வியும் அதற்கு ஈடுசெய்ய முடியாது. வேலைத்தலத்தில் ஆரம்பமுதல் தொழில் முறை, உண்மைப் பொருளோடும் உண்மை நிகழ்ச்சிச் சூழலோடும் தொடர்புள்ளதாக, பணி செய்வதன் மூலமும் கற்கப்படுகிறது. அங்கு கற்பிக்கப்படுவது தொழில்முறை மட்டுமன்று. வேலைத்தலத்தில் வாழ்க்கையே உளது. அது மாணவனுக்கு உளப் பண்பாட்டோடு வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களின் அறிவையும் அளிக்கின்றது. கலைக்குத் தொழில் முறையைக் காட்டிலும் இவையே இன்றியமையாதன."

வாலிபப்பிராயத்திலே திரு. ஆறுமுகம் அவர்கள் துடிதுடிப்பு மிகுந்தவராயும் வண்டிச்சவாரியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராயும் தன்மானம் மிக்கவரா யும விளங்கினர். அவ் வாலிபப் பிராயத் திற் சுயமுயற்சியாய் வாகனங்களையும் சிற்ப வேலைகளையும் செய்து வந்தார். இடையில் தன்னுடைய கலைத்திறமையை மேலும் விருத்திசெய்ய விரும்பிய அவர் தென்னிந்தியாவுக்குச் சென்றுர் ; தகுந்த ஆசானைத் தேடி அலைந்தார். தஞ்சாவூர் நாராயணசாமி ஸ்தபதி என்பவரைச் சிறிதுகாலம் குருவாய்க்கொண்டு கலை நுணுக்கங்களை ஆராய்ந்தார். முதல் நாளே ஆறுமுகத்தின் திறமை எப்படி இருக்கிறது என்பதை அறிய அவரைக் கொண்ட ஸ்தபதி அவர்கள் ஒரு இடபம் வரையும்படி பணித்தார். ஆறுமுகம் அவர் கள் வெகு விரைவாகவே அதை வரைந்து காட்டினர். அதைக்கண்ட ஸ்தபதியவர் கள் வாலிபனுகிய ஆறுமுகத்தை விழுந்து பணிந்தார். ஆறுமுகம் "பெரியவர்களா கிய நீங்கள் சிறுவனுகிய என்னை விழுந்து கும்பிடலாமா?" என்று பயபக்தியோடு கேட்டார். நாராயணசாமியவர்கள் ஆறு முகத்தின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

பின்பு, " நான் உன்னையா கும்பிட்டேன்? உன்னிடம் உள்ள கலைத்திறமையை அல்லவா கும்பிட்டேன். கலைஞர்கள், சிறியவர் பெரியவர் என்பது பாராமல், கலை எவரிடமிருந்தாலும் அவரை வழிபடல் வேண்டும்" என்றார். தகுந்த ஆசான் தனக்கு அகப்பட்டு விட்டார் என்று ஆறுமுகம் அவர்கள் பெரு மகிழ்வு கொண்டார். அவரிடமே சிற்ப வேலைகளில் உள்ள நுணுக்கங்களையும் பழகிக்கொண்டார்.

பின்பு அவர் தமது பிறந்த நாட்டுக்குத் திரும்பி வந்தார். தாம் பெருங் கலைஞராகி விட்டோமே என்று அவர் சும்மா இருக்கவில்லை. தன் தொழிலில் எல்லா விதமான சிறிய வேலைகளையும் அவரே செய்தார். கடைசல்வேலை, பெருவேலை, சிற்பம் செதுக்கல், வர்ணந் தீட்டல் முதலிய எந்த வேலைகளையும் அவர் செய்யத் தயங்கியதில்லை. இதுவே அவரது முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமாகும். அவர் சுளிபுரத்தில் விவாகஞ் செய்து மட்டுவிற் பதியை விட்டுத் திருநெல்வேலியைத் தமது இருப்பிடமாகக் கொண்டார். நெடுங்காலம் திருநெல்வேலியிலே இருந்தபடியால் அவரைத்

திருநெல்வேலி சிற்பாசாரியார் ஆறுமுகம் என்றே பலர் அழைத்தார்கள். யாழ்ப்பாணம்—திருநெல்வேலி, திரு. ஆறுமுகம் அவர்களாற் புகழடைந்தது.

அவருக்கு இறக்கும்போது வயது 73. அவருக்கு ஏழு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் இருக்கின்றார்கள்.

பேட்டி

i. **நற்சாட்சிப் பத்திரம் :-** திரு. வி. ஆறுமுகம் அவர்களும் அவரது புத்திரர்களும் கடைசியாக அலங்காரத்தேர் ஒன்றைக் குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் செய்து கொண்டிருந்தார்கள். ஆறுமுகம் அவர்கள் தொடக்ககாலத்தில் உருவங்களைக் கீறிய முறையைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். அதுமாத்திரமன்று, தேரின் வெள்ளோட்டம் சென்ற மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்திற்கு முதல்நாள் நடைபெற ஏற்பாடாகி யிருந்தது. அந்த நிகழ்ச்சியின்போது சிற்பக் கலைஞர் வி. ஆறுமுகம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க வேண்டும் என்றும் பலர் எண்ணினர். எனவே, அவர் வாழ்க்கை வரலாற்றை

அறிய என்மனம் அவாவியது. நானும் நண்பர் சி. செல்லத்துரை (வீரகேசரியின் யாழ்ப்பாண நிருபரும், பிரபல பேட்டிகளை "அவரவர் அபிப்பிராயம்" என்ற தலைப்பில் எழுதியவரும் ஆவர்) அவர்களும் ஒருநாள் திருநெல்வேலியில் அவரது வீட்டிற் பேட்டி கண்டோம். அதில் முக்கிய பகுதிகளை அப்படியே இங்கு தருகிறேன்.

ஈழநாடு பெருமையுற எத்தனையோ வாகனங்களையும், சித்திரத் தேர்களையும் செய்து ஓய்ந்துபோன கரங்கள்; தம் மனத்தகத்திற் கண்ட எண்ணற்ற சிற்பங்களை வடித்துத் தந்த விரல்கள்; நடுங்கியபடியே எழுபது வயதைத் தாண்டிவிட்ட ஆறுமுகம் ஒரு கட்டிலில் முடங்கிக் கிடக்கிறார். முன்பக்க வேலைக் கொட்டிலில் பலவகையாக உருவாகப் போகும் வாகனங்களின் துண்டுப்பாகங்கள் சிதறிக் கிடக்கின்றன. தேரின் புகைப்படமொன்று மங்கிய நிலையில் கொட்டிலில் தொங்குகிறது. நாங்கள் அவர் அருகே சென்று எம்மை அறிமுகம் செய்து கொள்ளுகிறோம். நாங்கள் வந்த நோக்கத்தை மெல்லமாகச் சொல்லி வைத்தவுடன் கட்டையான அந்த உருவத்தின் முகம்

மலர்கிறது. அவர் சம்பாஷிக்கத் தொடங்குகிறார். பஞ்சு போன்ற வெண்மையான தலையைத் தடவியபடியே பழையகால நினைவுகளை ஒருமுகப்படுத்துகிறார். சில வினாக்களுக்கு அடக்கமாக, தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளாமலும், கலை சம்பந்தப்பட்ட சில கேள்விகளுக்குத் தன்மானத்தை விட்டுக் கொடுக்காமலும் பதில் அளிக்கிறார். இயற்கையான ஹாஸ்யம் இடையிடையே பளிச்சிடுகிறது.

தமது இளமை, படிப்பு, குருகுலக் கல்வி, விவாகம் ஆகியவைகளைப்பற்றிக் கூறிவிட்டுத் தேர்கள் செய்த வரலாற்றைக் கூறத் தொடங்குகிறார். தனது காலத்துக்கு முன் யாழ்ப்பாணத்தில் அநேகமாக அடித்தளம் மாத்திரம் வேலைப்பாட்டுடன் கூடிய தேர்கள் தான் இருந்தன என்றும் பின்பே மேல்பண்டிகையோடு கூடிய தேர்கள் செய்யப்பட்டன என்றும் சொன்னார். கிட்டத்தட்ட முப்பதாவது வயதில் அத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முதல் தேரைச் செய்தார் என்றும் ஆனால் வீரமாகாளியம்மன் கோவில் தேர்தான் தனது புகழை உயர்த்தியதென்றும தன் வாழுளில் நடக்கமுடியாத சில சம்பவங்கள் அங்கு நடந்தன என்றும் பெருமிதப் படக் கூறினார்.

அதில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சொல்லும்படி நாங்கள் கேட்டபோது அவர் சிறிது நேரஞ் சிந்தித்துவிட்டுக் கூறியதாவது :

வீரமாகாளியம்மன் கோவில் தேரைப் பார்வையிடுவதற்காக அப்போது கவர்ணராய் இருந்த சேர் அண்டுறு கால்டிகொற் அவர்களைத் திரு. தளையசிங்கம் அவர்கள் அழைத்து வ்ந்திருந்தார். இதை முதல் நாளே அறிந்திருந்த நான் இரவோடிரவாக, பாயும் சிங்கம்; அதன் காலில் விருதுக்கொடி இப்படியாக ஒரு உருவத்தை அழகாகச் செய்து வைத்திருந்தேன். அதை அவருக்குப் பரிசாக அளித்தேன். உடனே அவர் தனக்குத் தெரிந்த தமிழில் "இது சிங்கம்; என்னைக் கூட்டிவந்தவரும் தளையசிங்கம்; இதைச் செய்த நீரும் ஒரு சிங்கம" என்று பாராட்டினர். ஏதோ நமது கலைகளுக்குப் புறம்பான ஒரு வெள்ளைக்காரரின் பாராட்டுத்தானே என்று நான் அலட்சியமாய் இருந்துவிட்டேன். ஆனால் கவர்ணர் அவர்களோ கொழும்பு திரும்பியவுடன் தமது அந்தரங்கக் காரியதரிசி மூலம் ஒரு

நற்சாட்சிப் பத்திரம் அனுப்பி என்னைத் திகைக்க வைத்துவிட்டார். இப்படியான பெருந்தன்மை நம்மவர்களிடம் இல்லவே யில்லை என்று கூறித் தாம் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்தப் பத்திரத்தை நடுங்குங் கரங்களால் நீட்டினார். அந்த நற்சாட்சிப்பத்திரத்தின் சாரம் இது :

Queen's House,
Colombo,
16 - 6 - 1941

.............................................................

I am directed by His Excellency the Governor to state that he was most agreeably impressed by the quality of the work embodied in the new temple chariot on the occasion of his visit to Veeramakaliamman Temple at the end of last month.

In His Excellency's judgement both the design and execution of it exhibited a high standard of craftsmanship.

Signed.........................................

அதன் தமிழ்மொழிபெயர்ப்புப் பின் வருமாறு :

குயின் ஹவுஸ், கொழும்பு,
16-6-41.

மகிமைபொருந்திய தேசாதிபதியவா களின் வேண்டுகோளின்படி இதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

கடந்த மாதத்தின் இறுதி நாட்களில் கனம் தேசாதிபதியவர்கள் வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு விஜயம் செய்த போது அங்குள்ள புதிய தேரின் எழிலான இன்பமுட்டும் அமைப்பும், உருவமும் தன் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்ததெனக் குறிப்பிட்டார்.

அதனுடைய விசேட அலங்காரங்களும், வேலைத் திறமையினால் வெளியிடப் பட்ட கலை நுட்பங்களும் உயர்ந்த கைப் பணி விற்பன்னரின் திறனை வெளிக்காட்டு கிறதென்பது அவரது முடிபாகும்.

ஒப்பம் ........................................

கவர்னரின் நற்சாட்சிப் பத்திரத்தைப் பற்றிச் சொல்லிய அவர், ஈழத்தின் கேசரி போல் விழங்கிய சேர் பொன். இராமநாதன் அவர்கள் ஒரு குதிரை வாகனத்தைச் செய்வித்துவிட்டு அதன் வேலைப்பாட்டை மெச்சி ஒரு தங்கப்பதக்கம் பரிசாக அளித்ததையும் வேறுபல பிரபுக்கள் செய்த உப

சாரங்களையும் பெரியகோட்டில் நீதிபதி யாய் இருந்தவரும் முன்னாள் இலங்கை இந்தியத் தூதுவராயிருந்தவருமாகிய குமாரசாமி அவர்கள் பொன்னுடை சாத் திக் கௌரவித்ததையும் குறிப்பிட்டார் கள். கலைஞனுக்கு அக்கலையை நன்கு அறிந்த பிரபுக்கள் அளிக்கும் உபசாரமே தூண்டுகோலாக உதவுகிற தென்பதை அவர் பேச்சில் இருந்து நாம் அறிந் தோம்.

ii. தேர்கள் :

நீங்கள் செய்த தேர்கள் எவை? அதில் ஏதாவது புதுமையைப் புகுத்தியிருக்கிறீர் களா? என்ற வினாவுக்கு விடையாக, அத்தியடிப்பிள்ளையார், நல்லூர் வீரமா காளியம்மன், கோப்பாய் வடக்குக் கந்த சுவாமி கோவில், புத்தூர்ச் சிவன் கோவில், மாதகல் பிள்ளையார் கோவில், உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவில், காரைநகர் முருகமூர்த்தி கோவில், குரும்ப சிட்டி அம்பாள் கோவில் முதலியவற்றிற் குத் தேர் செய்திருப்பதாகவும் சில விடு பட்டிருக்கலாம் என்றும் கூறினர்.

"தேர் சம்பந்தப்பட்டமட்டில் நான் மரபை மீறவில்லை; மீறக்கூடாது. மூல

ஸ்தானம், அதன் அளவு, பிரமாணங்கள் என்பவற்றிற்கும் அக்கோவிலில் செய்யப் படும் தேருக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும். அதுமாத்திரமா? ஒவ்வொரு சுவாமிக்கும் வெவ்வேறு வகைப்பட்ட அமைப்புக்கள் கொண்ட தேர்கள் செய் வது வழக்கம். இதை நாம் நினைத்தபடி மாற்றினாலும், சரியான அளவுப்படி செய்யாவிட்டாலும் துர் மரணங்கள் ஏற் படலாம். அதில் எனக்கு நம்பிக்கை இருக் கிறது'' என்று கூறிவிட்டுப் பல உதாரணங்களை அவர் சொன்னார். பின் சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு "இதை இந்தக்காலத்து வாலிபர்கள் நம்பமாட் டார்கள். இல்லையா?'' என்று சொல்லிப் புன்சிரிப்புச் சிரித்தார்.

**தமிழ் நாட்டிலிருந்து சிலர் இங்கு வந்து தேர் செய்கிறார்களே; அவர்களின் தேர் வேலையைப்பற்றித் தங்கள் அபிப் பிராயம் என்ன? என்பது எங்கள் வினா.**

"மனித உடம்பைத்தான் தேராக உருவகஞ் செய்து அமைக்கிறோம். ஒவ் வொரு அவயவங்களும் சரியானபடி பொருத்தமாக அமைந்திருந்தால்தான் அவன் பூரண மனிதன். தேரும் அப்

படியே. அவை சரியானபடி அமைந்திருக்க வேண்டும். இப்போது தமிழ் நாட்டிலிருந்து இங்குவந்து தேர் செய்தோரின் சில தேர்களைப் பார்த்தேன். என்னைக் கவரக் கூடியதாகவோ, என்னுற் செய்ய முடியாததாகவோ அவற்றில் ஒன்றும் இல்லை. சில தேர்களின் மேற்பண்டிகை அடித்தளத்திற்குப் பொருந்தியதாக இல்லை. உயரமாக இருக்கிறது என்பது என் எண்ணம். அவர்கள் விக்கிரகங்கள் செதுக்குவதில் ஓரளவு சிறந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன். பல வகையான விக்கிரகங்களையும் செதுக்குகிருர்கள் என்பதும் உண்மை. ஆனுல் நாங்களும் அவர்களின் தரத்திற்குக் குறைவில்லாமல் விக்கிரகங்களைச் செதுக்கி எங்கள் தேர்களிலும் அமைத்திருக்கின்ருேம் தானே. அவர்கள் தேவைக்கதிகமாக விக்கிரகங்களாலேயே தங்கள் தேர்களை நிரப்பிவிடுகிருர்களே. என்னுற் செய்யப்பட்ட தேர்களில் அடித்தளத்திற்கேற்ற பண்டிகை அளவாக இருக்கும். கம்பீரமான யாளிகள், குதிரைகள் எங்களுடையவை; இவற்றில் அவர்கள் எங்களை இன்னும் மிஞ்சிவிடவில்லை. பலர் கூட்டாகச் சேராமையாலும் ஒரு சிலரே

விக்கிரகம் அடிக்கக் கூடியவர்களாய் இருப்பதினாலும் நான் என் தேர்களில் அவற்றை அளவாக உபயோகித்திருக்கி றேன். பூசாந்திர முறிவுகளிலும் பண்டிகை செய்வதிலும் நாங்கள் நுணுக்கவாதிக ளாய் இருக்கின்றோம். ஏன்? குரும்பசிட்டி அம்பாள் ஆலயத் தேர் இலட்சத்திற்கு மேற் செலவழித்து மற்ற ஊர்களிற் சமீ பத்திற் செய்யப்பட்ட தேர்களிலும் பார்க்க அழகிலோ, கலை அம்சத்திலோ, உருவ அமைப்பிலோ, விக்கிரகக் கொத்து வேலைகளிலோ ஒன்றுங் குறைந்துவிட வில்லையே என்றார் அவர். 'உண்மை' என நான் ஒத்துக்கொண்டேன். கரவெட்டி கிராயிற் பிள்ளையார் கோவிலுக்கு 1939ஆம் ஆண்டு தான் செய்துகொடுத்த மஞ்சத்தின் தன்மைகளைப்பற்றியும் குறிப் பிட்டார்.

iii. வாகனங்கள் :

நீங்கள் செய்த வாகனங்களைப் பற்றி யும் ஏதாவது சொல்லுங்கள் என்று கேட் டோம்.

சென்ற ஐம்பது வருடமாக ஆயிரத் துக்கு மேற்பட்ட வாகனங்களை நான்

செய்திருக்கிறேன். வாகன வேலையே எங்கள் குடும்பத்துக்குப் போதும் போது மென்றிருக்கிறது. தேர்களில் மரபைப் பேணினாலும் வாகனங்களில், பல புதுமை களைச் செய்திருப்பவன் நான்தான். என் காலத்திற்குமுன் தனி இடபம், தனிச் சிங்கம், ஒற்றைக் குதிரை வாகனங்கள் தான் வழக்கத்தில் இருந்தன. சோடி இடபம், சோடிக் குதிரை, சோடிச் சிங்கம் என்பவற்றை நான்தான் முதலிற் செய் தேன். சவாரி செய்யும் எருதுகள் சோடி யாகச் செய்திருக்கின்றேன். வல்லு வெட்டித்துறை முத்துமாரி அம்பாள் கோவிலில் இதைப் பார்க்கலாம். அவை கூடச் சாஸ்திர மரபு மீறப்படாமல் இயற்கையாகவே செய்யப்பட்டிருக்கின் றன. மூன்று குதிரைகள் கொண்ட வாகனம் முதன் முதலில் நல்லூர்க் கந்த சுவாமி கோவிலுக்கு என்றாலேதான் செய்யப்பட்டது. வீரமாகாளி அம்மன் கோவில் தேரிலும் மூன்று குதிரைகளையே செய்து பூட்டினேன்.

பருத்தித்துறை முருகமூர்த்திகோவில் கைலாய வாகனந்தான் முதலிற் செய்யப்பட்டது. பின்பு எத்தனையோ கோவில்களுக்குக்

கைலாய வாகனஞ் செய்திருக்கிறேன். ஆனால், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கைலாய வாகனம் சில்லுகளோடு கூடிய விமானமுடையதாய் இழுக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக்கின்றது. கொழும்பில் வேல் விழாவிற் செல்லும் வெள்ளி இரதத்தின் முன் குதிரைகள் இரண்டும் என்னாற் செய்யப்பட்டனவே. அவை ஒரு போட்டிக்காகச் செய்யப்பட்டவை. என்னுடைய அக் குதிரைவாகனங்கள் தான் சிறந்தவை என்று தீர்மானிக்கப் பட்டு எனக்குக் கௌரவம் அளிக்கப்பட்டது. இதுவும் என்னால் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகும். முந்திய காலத்திலே மிகவும் பாரமான சூரனை மனிதர்கள் காவிக்கொண்டு நான்கு புறமும் சுற்றும் போது பெரிய இடர்ப்பாடு இருந்தது. இதை நீக்குவதற்காகத் தன்னிற் றானே சுழலும் சூரன் ஒன்றை இணுவில் சிவகாமி அம்மன் கோவிலுக்குச் செய்து கொடுத்துள்ளேன். அந்தச் சூரனில் நெஞ்சு பிளப்பதும், சிங்கம் வாய்மூடித் திறப்பதும் வேறுபுதுமைகளும் அடங்கி இருக்கின்றன. இதை நான் வாயாற் சொல்லுவதிலும் பார்க்க மகிடாசுர வதத்திலன்று நீங்கள் போய்ப் பார்ப்பதுதான் நல்லது என்றார்.

இதேபோலத்தான் பெருமாள் கோயில் இராவணனும் ஒரு புதிய படைப்பு என்ருர். இவைமாத்திரமல்லாமல் ஒரு தனித் தாமரை மலரையே வாகனமாய் நயினை தீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்குச் செய்து கொடுத்திருக்கின்றேன். ஈழத்தில் அநேகமாக அரிதாகக் காணப்படும் கிளி வாகனம் ஒன்றும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்காகச் செய்யப்பட்டிருக்கின்றது. இதே ஆலயத்திற் காணப்படும் தங்க மயில்வாகனத்தையும் நானே ஆக்கி னேன். இதனுடைய கழுத்தின் நெளிவு நல்ல கலையம்சம் பொருந்தியதாகும். ஈழத்தைவிட மலாயா, சிங்கப்பூர் முதலிய தேசங்களுக்கும் பல வாகனங்களைச் செய்து அனுப்பியுள்ளேன். வேறு எந்த விடயத்திற் போட்டியிட்டாலும், வாக னங்கள் செய்கின்ற விடயத்தில் என் னுடன் யாரும் இலகுவிற் போட்டியிட முடியாது என்ருர் அவர்.

### iv. சமீபகாலத்தில் மறுமலர்ச்சி :

**சமீபமாகச் சிலவருடங்களில் பிரபல கோவில்களுக்கெல்லாம் தேர் செய்யத் தொடங்கி யிருக்கிருர்களே, இவற்றில்**

சிலவற்றையாவது நீங்கள் முனைந்து ஒப்பந்தம் எடுத்தால் உள்ளூரிற் பல தொழிலாளருக்கும் நன்மையாயிருக்குமே என்று கேட்டதற்கு அவர் பதிலளித்ததாவது :

நானாகவே வலிந்து எந்த வேலைக்கும் போகின்ற வழக்கம் இல்லை. வருடத்தில் எனக்கு வரும் உழைப்பே என்னுடைய குடும்பத்தாருக்குப் போதும். என்னுடைய மக்களும் நானும், இன்னும் ஓரிரு குடும்பத்தினரும்தான் யாழ்ப்பாணத்தில் வாகனங்கள், தேர்கள் செய்கின்றோம். தென்னிந்தியாவிலிருந்து கலைஞர்கள் வந்து தேர் செய்வதை நான் ஒருபோதும் வெறுத்ததில்லை. நல்ல கலைக்கு இந்தியா இலங்கை என்ற பேதம் காட்டுவது கூடாது. சிற்பம், ஓவியம், சங்கீதம் போன்ற கலைகளுக்கெல்லாம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் காலத்துக்குக் காலம் தொடர்பு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. 'மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும்' என்பதில் நம்பிக்கையுள்ளவன் நான். கடவுள், கோவில் என்பவற்றையே நம்பாத சூழ்நிலை ஒன்று சிலகாலமாக உருவாகும்போலிருந்தது. ஆனால் இப்போதைய விழிப்புணர்ச்சி

எனக்கு மனச் சந்தோஷத்தையே அளிக்கின்றது.

இன்னுமொரு சங்கடம். பொருள்களின் விலையும், கூலியும் நாளுக்குநாள் ஏறிக்கொண்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையிற் பலரை வேலைக்கு வைத்துக் குறித்த காலத்தில் வேலைகளைச் செய்து கொடுக்க முடியுமா? தேரின் ஒவ்வொரு பகுதியும் செய்ய ஒவ்வொரு வகையான மரம் தேவைப்படுகின்றது. அம்மரங்களை இப்போது இலகுவிற் பெற முடியாது இருக்கின்றது. உதாரணமாக வீரமாகாளி அம்மன் கோவில் தேரை 1941ஆம் ஆண்டு பதினையாயிரம் ரூபாவுக்குள் தொண்ணூறு நாட்களிற் செய்து முடித்தோம். கிட்டத்தட்ட அதே அளவான உங்கள் குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தின் தேரை ஏறக்குறைய ஐம்பதினாயிரம் ரூபா செலவில் இரண்டு வருடங்களாகச் செய்யவேண்டி இருந்தது. ஆகவே தேர் வேலையை ஒப்பந்தம் எடுத்துச் செய்வதென்பது இலகுவில் முடியாத காரியம். நாட்கூலி முறைதான் சுலபமானது. நாங்களும் வஞ்சனையில்லாமல் உழைக்க வேண்டும். செய்விப்பவர்களும் எங்க

ளோடு எல்லா விடயத்தையும் மனந் திறந்து பேசி ஒத்துழைத்தல் வேண்டும். முடிவில் இத்தனை ஆயிரம் ரூபாவில் இவ்வளவு அழகான தேரா? என்று பார்ப்பவர்கள் மகிழவேண்டும். முக்கியமாகச் சொன்னால் "செய்தவன் மனமும், செய்வித்தோனின் மனமும் குளிரவேண்டும்" என்று அழுத்தமாகச் சொல்லி முடித்தார்.

V. அதீத நம்பிக்கை:

**நீங்களோ தளர்ந்துவிட்டீர்கள். மக்கள் உங்களைப்போல தேர், மஞ்சம், வாகனம் போன்ற சிற்ப வேலைகளைச் செய்வார்களா? உங்களுக்கு அவர்களிடம் நம்பிக்கை பிறந்திருக்கின்றதா? என்ற வினவுக்கு அவர் சொன்னதாவது:**

என்னுடைய மக்கள் கல்லூரியிற் படித்தாலும், சிறுவயது முதற்கொண்டே சில மணி நேரமாவது இந்தப் பரம்பரைத் தொழிலைப் பழகவேண்டும் என்று நானும் மனைவி பொன்னம்மா அவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அரசாங்க உத்தியோகத்திலும் பார்க்கச் சுய மரியாதையுள்ள இந்தத்தொழில் எவ்வளவோ மேலானது என்று கருதி வந்திருப்பவன்

நான். மூத்த மகன் தம்பித்துரை அரசாங்க உத்தியோகத்திற்குப் போகாமல் உள்ளூரிலேயே ஆசிரியனுகி இருப்பதும், இந்தப் பாரம்பரியமாக வந்த தொழிலைக் காப்பாற்றும் எண்ணத்துடன் நான்செய்த முடிபுதான். அடுத்த மகன் சீவரத்தினமும் ஓரளவு படித்துவிட்டு இத்தொழிலில் ஆர்வங்காட்டி வருகின்ருன். அதேபோலத்தான் அடுத்த மகன் கந்தசுவாமியும் மற்றமக்களும். எனக்குப் பிறகும் எங்களுடைய இந்தப் பரம்பரைத் தொழில் நன்ருக நடைபெறும் என்பதைக் குரும்பசிட்டி அம்பாள் ஆலயத் தேர்வேலையைச் செய்ததன்மூலம் அவர்கள் நிருபித்துவிட்டார்கள். இது எனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

**உங்களின் மக்களைத்தவிர வேறு யாரேனும் உங்களிடம் தொழில் பழகி உங்களின் பெயரை விளங்க வைக்கக் கூடியதாக இருக்கின்ருர்களா ?**

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் இத்தகைய சிற்பவேலைகள் செய்துகொண்டிருப்பவர்களில் அநேகர் என்னிடந்தான் தொழில் பழகியுள்ளனர். ஆனுல், இக்

கலையை முறையாகக் கற்பதற்கு அநேக காலம் செல்லும். பலர் அவ்வளவு காலத்திற்கு நின்று பயில்வதில்லை; அரை குறை அறிவுடனேயே போய்விடுகின்றனர். அப்படியானவர்கள் என்னைவிட்டுச் சென்று தங்கள் சுயமுயற்சியில் வாகன வேலைகளைச் செய்தாலும் நான் கவலைப் படுவதில்லை. என்று கூறிமுடித்தார்.

பெரியவரே இன்று உங்களைக் கண்டதில் எங்களுக்குப் பரிபூரண திருப்தி என்று கூறி நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம்.

## கலைமடந்தையின் தவப்புதல்வன்

சென்ற நூற்றாண்டின் இறுதிக்காலத்திலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் பலதுறைகளிலும் தலைசிறந்த பெரியார்கள் யாழ்ப்பாணத்தில் தோன்றி நம்மிடையே வாழ்ந்து புகழ் ஈட்டி மறைந்தார்கள், வேதாந்த தீபமாக விளங்கிய யோகர்சுவாமி அவர்களும், புலவர்மணியாக விளங்கிய தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் அவர்களும், இலக்கணப் பெருங்கடலாக விளங்கிய மகாவித்துவான் கணேசையர் அவர்களும், கற்பனைக்

களஞ்சியம் குருகவி மகாலிங்கசிவம் அவர்களும், பத்திரிகைத் துறையில் தன் புகழை ஈட்டிய ஈழகேசரி நா. பொன்னையா அவர்களும், கலாவிமர்சகர் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களும், வைத்திய கலாநிதியும், பரோபகாரியுமாகிய டாக்டர் பி. எஸ். அவர்களும், லய, ஞான, குபேர பூபதியாக விளங்கிய காமாட்சிசுந்தரமவர்களும், ஓவியவிற்பன்னர் எஸ். ஆர். கனகசபை அவர்களும் தத்தம் துறையில் ஈழத்தின் புகழை மேம்படச் செய்தார்கள். அவர்களைப் போன்று சிற்பக் கலையின் மேம்பாடு இன்னும் ஈழத்தில் மங்கிவிடவில்லை என்று தன் வாகனங்களாலும், மஞ்சங்களாலும், தேர்களாலும் மேன்மை கொள்ளச் செய்த பெருமைக்குரியவர் திருநெல்வேலி ஆறுமுகம் ஆசாரியார் அவர்கள் என்று கூறின் அது மிகையாகாது.

கலைமடந்தை உறையும் இடத்தைக் கூறவந்த பாரதியார்:

“ கோர்த சன்ற தொழில்உடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோவில்
ஈத னைத்தின் எழிலிடை உற்றுள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றுள் ”

என்று பாடியுள்ளார். கோவில் தேர்களிலும், மஞ்சங்களிலும், வாகனங்களிலும் அழகுத் தெய்வத்தை உபாசித்துக் கலைமடந்தையின் மூத்த புதல்வனாக அவர் விளங்கினார்.

'கல்கி' அவர்கள் ஆனந்த விகடன் ஆசிரியராய் இருந்தபொழுது 'மாலி' என்ற பிரபல சித்திரக்காரருடன் யாழ்ப்பாணம் வந்தார், நகரசபை மண்டபத்திலே கல்கி அவர்கள் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தபொழுது அதே மேடையில் வைக்கப்பட்டிருந்த கரும்பலகையில் உடனுக்குடன் இராஜாஜி, காந்தி போன்றவர்களின் படங்களை மாலி வெண்கட்டியாற் கீறினார். அவர் கீறியதிலுள்ள புதுமை என்னவென்றால் தலையிலேயிருந்து வரையத் தொடங்காமல், மூக்குக்கண்ணாடியி லிருந்தும் சால்வையிலிருந்தும் வரைந்தமைதான். அதை யாழ்ப்பாணத்து இரசிக மகாசனங்கள் கைதட்டி வரவேற்றார்கள். அதை அப்போது பார்த்த எனக்கும் வியப்பாகவே இருந்தது. அந்த வியப்பு பல ஆண்டுகளுக்குப் பிறகு திரு. வி. ஆறுமுகம் ஆசாரியார் அவர்கள் அன்னமொன்றைக் கால்

விரல் நுனியிலிருந்து கீறத்தொடங்கிய போதுதான் மாறியது. மேலும் அவர் ஒரு யாளியை வாலிலிருந்து சிறப்பாகச் செதுக்கத் தொடங்கியபொழுது அவரிடம் இருந்த மதிப்பு இன்னுமொரு படி மேலோங்கியது. உண்மையாகவே ஆறுமுகம் அவர்கள் ஒரு தலைசிறந்த கலைஞர்; தவப்பேறு பெற்ற கலைஞர்; தனித்துவமுள்ள கலைஞர்.

முடிவுரை :

மேலைநாட்டினர் ஈழத்தை அடிமைப்படுத்தத் தொடங்கிய பின்னர் 'உத்தியோகம் புருஷலட்சணம்' என்று கூறிக்கொண்டு அநேகர் தம் குலவித்தையைக் கூடத் துறந்து அடிமை வேலையை நாடினர். தமிழரது மொழியும் கலையும் தேடுவாரற்றுக் கிடந்தன. அப்படிப்பட்ட காலங்களிற் கூட ஒருசிலர்தான் நம் கலைகளை வளர்த்தனர்; போற்றினர். அப்படிப்பட்ட கலைஞர்களை நாடு போற்றவேண்டும். அல்லாதுவிட்டால் அந்த நாட்டிலே உண்மைக் கலைஞன் இனிமேல் தோன்ற மாட்டான்.

திரு. வி. ஆறுமுகம் அவர்கள் நமது சிற்பக்கலையின் பிரதிநிதி. பரம்பரை பரம்பரையாக வந்த பேராற்றின் ஒரு அருவி. அது தன் ஊற்றுப் பெருக்கால் உலகுக்கு உவகை அளித்தது. அதன் தண்ணீரைப் பருகியவர்கள் — இனிமையை உணர்ந்தவர்கள் — நிச்சயம் அதைப் போற்றியே தீரவேண்டும்.

ஓவியர்மணி ரவிவர்மாவைப்பற்றிப் பாடிய பாரதியார் பின்வருமாறு கூறியிருக்கிறுர். அது பின்வருமாறு :

" அரம்பைஊர் வசிபோ லுள்ள
அமரமேல் லியலார் செவ்வி,
திறம்பட வகுத்த பெம்மான்!
செய்தொழில் ஒப்பு நோக்க,
விரும்பியே கோல்லா மின்று
விண்ணுல கடைந்து விட்டாய்!
அரம்பையர் நின்கைச் செய்கைக்
கழிதலங் கறிவை திண்ணம். "

அதே பாடலைத்தான் சிற்பாசாரியார் திரு. வி. ஆறுமுகம் அவர்களைப் புகழும் போதும் எம்மாற் குறிப்பிட முடிகிறது.

கலைமடந்தைக் கொருமணியாய்க் கற்பனையிற்
பலஉருவங் கண்ட பெம்மான்
விலைமதித்தற் கரியபல தேர்களெலாம்
செய்தீழ நாட்டின் சீரை
அலைகடலுக் கப்பாலும் அறிவித்தான்
அவன்புகழை நாளும் நாங்கள்
தலைநிமிர்த்திக் கூறிடுவோம் தரணியெலாம்
கலைப்பெருமை ஓங்கச் செய்வோம்.

இக்கலைஞரின் ஞாபகார்த்தமாக அவருடைய வாகனங்களும், தேர்களும், மஞ்சங்களும், ஈழத்தின் நாலுதிசைகளிலும் நின்று நிலவும் என்பதும் அவருக்கே உரிய தனித்துவமான ஆறுமுகப்பாணி ஒளிவிட்டுப் பிரகாசிக்குமென்பதும் உண்மை. சிற்பக்கலைஞர் ஆறுமுக ஆச்சாரியாரின் புகழ் வாழ்க.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்— ஆ118-6/64